# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C. 434/2023**

**Prosecution witness : அ.சா.1** **Date : 17.04.2025.**

| | |
|---|---|
| **Name : Babu** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டடப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் தற்போது சேலம் மாவட்டம் வாழப்பாடி வட்டம் கருமந்துறை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 02.08.2019 ம் தேதியன்று இரவு அலுவலாக பொட்டனேரி என்ற இடத்திற்கு நான் மற்றும் பழனிவேல் இருவரும் இரவு 9.45 மணிக்கு சென்றோம். இரவு அலுவல் முடித்துவிட்டு எம்.காளிப்பட்டி வந்துவிட்டோம். பிறகு காவல் நிலையத்தில் இருந்து நிலைய பாரா தலைமை காவலர் 990 ரவிக்குமார் என்பவர் எனக்கு தொலைப்பேசி மூலம் அழைத்து மேச்சேரி பேருந்து நிறுத்ததில் ஒரு நபர் குடிப்போதையில் பொதுமக்களிடம் தகராறு செய்து கொண்டிருக்கிறார் என்று சொன்னார். இராணுவ வீரர் என்னை ஒன்றும் செய்யமுடியாது என்று கூறிக்கொண்டு குடிப்போதையில் பதிவெண் இல்லாத YAMAGA FZ என்ற இருசக்கர வாகனத்தில் தகராறு செய்து கொண்டிருப்பதாக தகவல் சொன்னார்.

2. சம்பவயிடத்திற்கு இரவு 10 மணிக்கு சென்றோம். அதன் பிறகு தகவல் கிடைத்து பைக் பெட்ரோல் சிறப்பு காவல் துறை ஆய்வாளர் பழனிசாமி சம்பவயிடத்திற்கு வந்தார். பிறகு அந்த நபரை விசாரித்தபோது அவருடைய பெயர் தர்மராஜ் என்றும், மேச்சேரி தெப்பகுளத்தை சேர்ந்தவர் என்றும் தெரியவந்தது.

நாங்கள் இருவரும் அவரைப்பார்த்து தேவையில்லாமல் பிரச்சனை செய்து கொண்டு இருசக்கர வாகனத்தை சாலையில் போடவேண்டாம் என்று கூறினோம். அதற்கு அவர் தேவடியா, கண்டாஓலி என்ற கெட்டவார்த்தையால் திட்டினார். அவர் அவருடைய கையால் என்னுடைய மூக்கில் குத்தி, என்னுடைய லத்தியை பிடிங்கி யாராவது அருகில் வந்தால் கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார். பழனிசாமியை பார்த்து நீ என்னை ஒன்றும் புடுங்கமுடியாது என்றும் தேவடியா, கண்டாரஓலி பையா என்று கெட்டவார்தையால் திட்டினார்.

3. குருசாமி காவல் சிறப்பு ஆய்வாளர் அவர்கள் அங்கு வந்தார். அவர் இரவு ரோந்து அலுவலில் இருந்தார் தகவல் தெரிந்தவுடன்அங்கு வந்தார். அவரையும் கெட்ட வார்த்தையால் திட்டி லத்தியால் குருசாமியின் இடது கை ஆள்காட்டி விரலில் அடித்து இரத்த காயத்தை ஏற்படுத்தினார். பிறகு பொதுமக்கள் உதவியிடன் நானும் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்களும் தர்மராஜ் மற்றும் அவருடைய பதிவு செய்யாத இருசக்கர வாகனத்துடன் காவல் நிலையம் வந்தோம்.

4. இது சம்மந்தமாக காவல் உதவி ஆய்வாளரிடம் நான் தனிஅறிக்கை ஒன்று கொடுத்தேன். தனிஅறிக்கையில் உள்ள விவரம் எனக்கு தெரியும். தனி அறிக்கையில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். தனிஅறிக்கை **அ.சாஆ.1** ஆகும். ஆஜர் எதிரிதான் சம்பவத்தில் ஈடுபட்டார் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

5. நான் எங்கிருந்தபோது தகவல் கிடைத்தது என்றால் எம்.காளிப்பட்டியில் இருந்தபோது தகவல் கிடைத்தது. பழனிசாமி எஸ்.எஸ்.ஐ எங்கிருந்து வந்தார் என்றால் டவுன் மூவிங்கில் இருந்து வந்தார். அதன்சுற்றளவு என்னால் சொல்ல முடியுமா என்றால் 4 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும். பழனிசாமி எஸ்.எஸ்.ஐ அவர்களுக்கு யார் தகவல் கொடுத்தார்கள் என்றால் நிலைய பாரா

அலுவலில் இருந்த காவலர் ரவிக்குமார் என்பவர் தகவல் கொடுத்தார். குருசாமி சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் எங்கிருந்தார் என்றால் டவுன் மூவிங்கில் இருந்தார். ரவிக்குமார் எஸ்.எஸ்.ஐ அவர்களுக்கு யார் தகவல் கொடுத்தார்கள் என்றால் நிலைய பாரா அலுவலில் இருந்த காவலர் ரவிக்குமார் என்பவர் தகவல் கொடுத்தார். நாங்கள் மூன்று பேரும் எவ்வளவு நேரத்திற்குள் சம்பவயிடம் சென்றோம் என்றால் குறைந்தபட்சம் ¼ மணிநேரத்தில் சென்றோம்.

6. பொதுமக்கள் அவசர இணைப்பு எண்.100 மூலமாக காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்தார்கள். இதை தவிர வேறு பொது மக்கள் யாரும் எழுத்து பூர்வமாக புகார் அளிக்கவில்லை என்றால் ஆமாம். போன் மூலமாக மட்டுமே தகவல் தெரிவித்தார்கள். பொதுமக்கள் யாருக்கும் அடி, உதை, பிரச்சனை ஏதும் இல்லை என்றால் ஆமாம்.

7. நான் தற்போது சொன்னவாறு தான் காவல் ஆய்வாளரிடம் விசாரிக்கும் போது சொன்னேன் என்றால் ஆமாம். மருத்துவரிடமும் அவ்வாறு தான் சொன்னேன் என்றால் ஆமாம். கையை மடக்கி மூக்கின் மீது குத்தினார் என்றால் ஆமாம். மூக்கிலிருந்து ரத்தம் வந்த போது எனக்கு மயக்கம் ஏற்பட்டதா என்றால் இல்லை. மூக்கில் காயம் ஏதேனும் ஏற்பட்டதா என்றால் இல்லை, ரத்தம் மட்டும் வந்தது.

8. உடம்பில் வேறு எங்காவது அடி ஏற்பட்டதா என்றால் இடது கை சுண்டுவிரலில் அடி. லத்தியில் அடித்ததால் லேசான சிராய்ப்பு காயம் இடது கை சுண்டுவிரலில் ஏற்பட்டது. லத்தியால் அடித்தால் வீங்குமா அல்லது சிராய்ப்பு காயம் ஏற்படுமா என்றால் அது அடிக்கும் தன்மையை பொறுத்து தான் சொல்ல முடியும். இவை தவிர வேறு அடி ஏதும் எனக்கு ஏற்படவில்லை. மது போதையில் தள்ளாடிக் கொண்டிருந்தாரா, நேராக இருந்தாரா என்றால் தள்ளாடிக் கொண்டிருந்தார்.

9. நான்கு காவலர்கள் சம்பவ இடத்தில் இருந்தோம் என்றால் ஆமாம். நாங்கள் நால்வரும் இருக்கும் போது தள்ளாடி கொண்டிருந்த நபர் எங்களை தாக்கும் போது நாங்கள் என்ன செய்து கொண்டிருந்தோம் என்றால் அதிகப்படியான மது

போதையில் இருந்ததால் நாங்கள் ஒன்றும் செய்யவில்லை.

10. போன் மூலமாக தகவல் தெரிந்து ஒவ்வொருவராக ஆஜரான பின்பு என்ன செய்தோம் என்றால் எதிரிக்கு எச்சரிக்கை செய்தோம். வண்டியை நடுரோட்டிலிருந்து எடுத்து செல்ல அறிவுறுத்தினோம். அவ்வாறு அறிவுறுத்திய பிறகு எங்களை திட்டி அடித்தார். பழனிசாமியை திட்டிய போது நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். குருசாமியை அடிக்கும் போது பார்த்தேன் என்றால் ஆமாம். பிறகு விலக்கிவிட்டேன்.

11. குருசாமி மற்றும் பழனிசாமி இருவரையும் அடிக்கும் போது என்ன செய்தோம் என்றால் நாங்கள் பேசாமல் இருந்தோம். என்னிடம் இருந்து லத்தியை பிடுங்கும் போது நான் ஏன் லத்தியை கொடுத்தேன் என்றால் நான் லத்தி கொடுக்கவில்லை, அவர் தான் பிடுங்கினார். லத்தியை திடீரென பிடுங்கியதால் அவர் வசம் சென்றது. ஒரு நபர் போதையில் தள்ளாடிய நிலையில் இருக்கும் போது நான்கு போலீசார் இருக்கும் போது ஒரு போலீசாரிடமிருந்து லத்தியை பிடுங்கி அடிக்க வாய்ப்பில்லை என்றும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

12. எதிரி மது போதையிலிருந்தார் என ஆய்வு செய்தோமா என்றால் ஓமலூர் அரசு மருத்துவமனையில் மருத்துவரிடம் சான்று பெற்றுள்ளோம். என்ன வகையான ஆய்வு செய்தார்கள் என்றால் மருத்துவர் தான் செய்தார். நான் ஓமலூர் மருத்துவமனைக்கு எதிரியை அழைத்து செல்லவில்லை என்றால் ஆமாம். அப்போது நான் உள்நோயாளியாக இருந்தேன். குருசாமி அவர்களும் உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்தார்.

13. நான் சிகிச்சையிலிருந்ததால் எந்த காவலர் எதிரியை மருத்துவ பரிசோதனைக்கு அழைத்து சென்றார் என்ற விவரம் எனக்கு தெரிய வாய்ப்பில்லை என்றால் ஆமாம். எனக்கு ரத்த காயம் ஏற்பட்டதால் எக்ஸ்ரே பரிசோதனை செய்யப்பட்டதா என்றால் இல்லை. மூக்கில் ஜவ்வு கிழிந்துவிட்டது. மருத்துவர் சான்று வழங்கியுள்ளார்.

14. ஜவ்வு கிழிந்ததை மருத்துவர் எவ்வாறு அறிந்து கொண்டார் என்றால்

என்னை நேரடியாக பரிசோதனை செய்து தெரிந்து கொண்டார். ஜவ்வு கிழிந்ததால் எத்தனை நான் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன் என்றால் ஓர் இரவு சிகிச்சை பெற்றேன். கிழிந்த ஜவ்விற்கு தையல் போடப்பட்டதா என்றால் இல்லை. எதிரிக்கு சிறு வயது முதல் குடிபழக்கம் இல்லை என்றால் சரியல்ல. மருத்துவர் குடிபழக்கம் உள்ளதாக சான்று வழங்கியுள்ளார்.

15. எதிரிக்கும் மேச்சேரியில் எக்ஸ். சேர்மன் ராஜா மகனுக்கும் இரு சக்கர வாகன விபத்து சம்மந்தமாக போன் மூலமாக சொன்னதால் அதன் காரணமாக எதிரி மீது பொய் வழக்கு போட்டோம் என்றால் சரியல்ல. எதிரி மேச்சேரி காவல் நிலையத்திற்கும், உயர் அதிகாரிகளுக்கும் இது சம்மந்தமாக எதிரி மனு அனுப்பியுள்ளார் என்றும் அது சம்மந்தமாக நாங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

16. பஸ் ஸ்டான்டில் எனக்கும் எதிரிக்கும் வாக்குவாதம் எவ்வளவு நேரம் நடந்திருக்கும் என்றால் 20 நிமிடம் வாக்குவாதம், அடித்தது எவ்வளவு நேரம் என்றால் அந்த 20 வது நிமிடத்திற்குள் தான். நான் அங்கு சென்ற போது பொது மக்கள் எவ்வளவு பேர் இருந்தனர் என்றால் 30 நபர்கள் இருந்தனர். பொது மக்கள் யாரிடமாவது சம்பவம் குறித்து விசாரித்தோமா என்றால் விசாரித்தோம். அவ்வாறு யார் யாரை விசாரித்தோம் என்றால் பெயர் தெரியாது. ஆனால் விசாரித்தோம்.

17. யார் விசாரணை செய்தார்கள் என்றால் காவல் ஆய்வாளர் செய்தார். காவல் ஆய்வாளர் சம்பவயிடத்தில் இல்லை என்றால் ஆமாம், ஆனால் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார். என்று விசாரித்தார் என்றால் 3ம் தேதியன்று விசாரணை செய்தார். நாங்கள் நால்வரும் பேருந்து நிறுத்தம் சென்ற போது நாங்கள் யாரையாவது விசாரித்தோமா என்றால் ஆமாம். அவர்களை சாட்சியாக காண்பிக்கப்பட்டுள்ளார்கள்.

18. சம்பவயிடத்தில் இருந்த 30 நபர்களையும் நாங்கள் நால்வரும் விசாரணை செய்தோமா என்றால் இல்லை. உண்மையில் நான் சொன்னவாறு சம்பவம் நடந்திருந்தால் 30 நபர்களையும் விசாரித்திருப்போம் என்றும் சொன்னால்

சரியல்ல. 30 நபரையும் அடுத்த நாள் காவல் நிலையம் அழைத்து சாட்சியாக விசாரிக்க அழைத்து சென்றோம். சாட்சி மீண்டும் விசாரித்து வாக்குமூலம் பதியவில்லை. 30 பேரும் சம்பவத்திற்கு பிறகு பேருந்தில் ஏறி சென்றுவிட்டார்கள். மறுநாள் காவல் ஆய்வாளர் அவர்களை விசாரித்துள்ளார், அவரை கேட்டால் தான் தெரியும்.

19. சம்பவயிடத்திலிருந்த 30 நபர்களுடைய பெயர் மற்றும் விலாசம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான்கு பேருக்கும் தெரியாதா என்றால் தெரியாது. ஓர் அரசியல் வாதி போன் செய்த பின்னிட்டு எதிரியை அழைத்து சென்று எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தோம் என்றால் சரியல்ல. 100 ல் புகார் கொடுத்தது யார் என்று எனக்கு தெரியாது என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 434/2023**

**Prosecution witness : அ.சா.1** **Date : 17.04.2025.**

| | |
|---|---|
| **Name : Babu** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டடப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தற்போது சேலம் மாவட்டம் வாழப்பாடி வட்டம் கருமந்துறை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 02.08.2019 ம் தேதியன்று இரவு அலுவலாக பொட்டனேரி என்ற இடத்திற்கு நான் மற்றும் பழனிவேல் இருவரும் இரவு 9.45 மணிக்கு சென்றோம். இரவு அலுவல் முடித்துவிட்டு எம்.காளிப்பட்டி வந்துவிட்டோம். பிறகு காவல் நிலையத்தில் இருந்து நிலைய பாரா தலைமை காவலர் 990 ரவிக்குமார் என்பவர் எனக்கு தொலைப்பேசி மூலம் அழைத்து மேச்சேரி பேருந்து நிறுத்ததில் ஒரு நபர் குடிப்போதையில் பொதுமக்களிடம் தகராறு செய்து கொண்டிருக்கிறார் என்று சொன்னார். இராணுவ வீரர் என்னை ஒன்றும் செய்யமுடியாது என்று கூறிக்கொண்டு குடிப்போதையில் பதிவெண் இல்லாத YAMAGA FZ என்ற இருசக்கர வாகனத்தில் தகராறு செய்து கொண்டிருப்பதாக தகவல் சொன்னார்.

2. சம்பவயிடத்திற்கு இரவு 10 மணிக்கு சென்றோம். அதன் பிறகு தகவல் கிடைத்து பைக் பெட்ரோல் சிறப்பு காவல் துறை ஆய்வாளர் பழனிசாமி சம்பவயிடத்திற்கு வந்தார். பிறகு அந்த நபரை விசாரித்தபோது அவருடைய பெயர் தர்மராஜ் என்றும், மேச்சேரி தெப்பகுளத்தை சேர்ந்தவர் என்றும் தெரியவந்தது.

நாங்கள் இருவரும் அவரைப்பார்த்து தேவையில்லாமல் பிரச்சனை செய்து கொண்டு இருசக்கர வாகனத்தை சாலையில் போடவேண்டாம் என்று கூறினோம். அதற்கு அவர் தேவடியா, கண்டாஓலி என்ற கெட்டவார்த்தையால் திட்டினார். அவர் அவருடைய கையால் என்னுடைய மூக்கில் குத்தி, என்னுடைய லத்தியை பிடிங்கி யாராவது அருகில் வந்தால் கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார். பழனிசாமியை பார்த்து நீ என்னை ஒன்றும் புடுங்கமுடியாது என்றும் தேவடியா, கண்டாரஓலி பையா என்று கெட்டவார்தையால் திட்டினார்.

3. குருசாமி காவல் சிறப்பு ஆய்வாளர் அவர்கள் அங்கு வந்தார். அவர் இரவு ரோந்து அலுவலில் இருந்தார் தகவல் தெரிந்தவுடன்அங்கு வந்தார். அவரையும் கெட்ட வார்த்தையால் திட்டி லத்தியால் குருசாமியின் இடது கை ஆள்காட்டி விரலில் அடித்து இரத்த காயத்தை ஏற்படுத்தினார். பிறகு பொதுமக்கள் உதவியிடன் நானும் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்களும் தர்மராஜ் மற்றும் அவருடைய பதிவு செய்யாத இருசக்கர வாகனத்துடன் காவல் நிலையம் வந்தோம்.

4. இது சம்மந்தமாக காவல் உதவி ஆய்வாளரிடம் நான் தனிஅறிக்கை ஒன்று கொடுத்தேன். தனிஅறிக்கையில் உள்ள விவரம் எனக்கு தெரியும். தனி அறிக்கையில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். தனிஅறிக்கை **அ.சாஆ.1** ஆகும். ஆஜர் எதிரிதான் சம்பவத்தில் ஈடுபட்டார் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

5. நான் எங்கிருந்தபோது தகவல் கிடைத்தது என்றால் எம்.காளிப்பட்டியில் இருந்தபோது தகவல் கிடைத்தது. பழனிசாமி எஸ்.எஸ்.ஐ எங்கிருந்து வந்தார் என்றால் டவுன் மூவிங்கில் இருந்து வந்தார். அதன்சுற்றளவு என்னால் சொல்ல முடியுமா என்றால் 4 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும். பழனிசாமி எஸ்.எஸ்.ஐ அவர்களுக்கு யார் தகவல் கொடுத்தார்கள் என்றால் நிலைய பாரா

அலுவலில் இருந்த காவலர் ரவிக்குமார் என்பவர் தகவல் கொடுத்தார். குருசாமி சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் எங்கிருந்தார் என்றால் டவுன் மூவிங்கில் இருந்தார். ரவிக்குமார் எஸ்.எஸ்.ஐ அவர்களுக்கு யார் தகவல் கொடுத்தார்கள் என்றால் நிலைய பாரா அலுவலில் இருந்த காவலர் ரவிக்குமார் என்பவர் தகவல் கொடுத்தார். நாங்கள் மூன்று பேரும் எவ்வளவு நேரத்திற்குள் சம்பவயிடம் சென்றோம் என்றால் குறைந்தபட்சம் ¼ மணிநேரத்தில் சென்றோம்.

6. பொதுமக்கள் அவசர இணைப்பு எண்.100 மூலமாக காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்தார்கள். இதை தவிர வேறு பொது மக்கள் யாரும் எழுத்து பூர்வமாக புகார் அளிக்கவில்லை என்றால் ஆமாம். போன் மூலமாக மட்டுமே தகவல் தெரிவித்தார்கள். பொதுமக்கள் யாருக்கும் அடி, உதை, பிரச்சனை ஏதும் இல்லை என்றால் ஆமாம்.

7. நான் தற்போது சொன்னவாறு தான் காவல் ஆய்வாளரிடம் விசாரிக்கும் போது சொன்னேன் என்றால் ஆமாம். மருத்துவரிடமும் அவ்வாறு தான் சொன்னேன் என்றால் ஆமாம். கையை மடக்கி மூக்கின் மீது குத்தினார் என்றால் ஆமாம். மூக்கிலிருந்து ரத்தம் வந்த போது எனக்கு மயக்கம் ஏற்பட்டதா என்றால் இல்லை. மூக்கில் காயம் ஏதேனும் ஏற்பட்டதா என்றால் இல்லை, ரத்தம் மட்டும் வந்தது.

8. உடம்பில் வேறு எங்காவது அடி ஏற்பட்டதா என்றால் இடது கை சுண்டுவிரலில் அடி. லத்தியில் அடித்ததால் லேசான சிராய்ப்பு காயம் இடது கை சுண்டுவிரலில் ஏற்பட்டது. லத்தியால் அடித்தால் வீங்குமா அல்லது சிராய்ப்பு காயம் ஏற்படுமா என்றால் அது அடிக்கும் தன்மையை பொறுத்து தான் சொல்ல முடியும். இவை தவிர வேறு அடி ஏதும் எனக்கு ஏற்படவில்லை. மது போதையில் தள்ளாடிக் கொண்டிருந்தாரா, நேராக இருந்தாரா என்றால் தள்ளாடிக் கொண்டிருந்தார்.

9. நான்கு காவலர்கள் சம்பவ இடத்தில் இருந்தோம் என்றால் ஆமாம். நாங்கள் நால்வரும் இருக்கும் போது தள்ளாடி கொண்டிருந்த நபர் எங்களை தாக்கும் போது நாங்கள் என்ன செய்து கொண்டிருந்தோம் என்றால் அதிகப்படியான மது

போதையில் இருந்ததால் நாங்கள் ஒன்றும் செய்யவில்லை.

10. போன் மூலமாக தகவல் தெரிந்து ஒவ்வொருவராக ஆஜரான பின்பு என்ன செய்தோம் என்றால் எதிரிக்கு எச்சரிக்கை செய்தோம். வண்டியை நடுரோட்டிலிருந்து எடுத்து செல்ல அறிவுறுத்தினோம். அவ்வாறு அறிவுறுத்திய பிறகு எங்களை திட்டி அடித்தார். பழனிசாமியை திட்டிய போது நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். குருசாமியை அடிக்கும் போது பார்த்தேன் என்றால் ஆமாம். பிறகு விலக்கிவிட்டேன்.

11. குருசாமி மற்றும் பழனிசாமி இருவரையும் அடிக்கும் போது என்ன செய்தோம் என்றால் நாங்கள் பேசாமல் இருந்தோம். என்னிடம் இருந்து லத்தியை பிடுங்கும் போது நான் ஏன் லத்தியை கொடுத்தேன் என்றால் நான் லத்தி கொடுக்கவில்லை, அவர் தான் பிடுங்கினார். லத்தியை திடீரென பிடுங்கியதால் அவர் வசம் சென்றது. ஒரு நபர் போதையில் தள்ளாடிய நிலையில் இருக்கும் போது நான்கு போலீசார் இருக்கும் போது ஒரு போலீசாரிடமிருந்து லத்தியை பிடுங்கி அடிக்க வாய்ப்பில்லை என்றும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

12. எதிரி மது போதையிலிருந்தார் என ஆய்வு செய்தோமா என்றால் ஓமலூர் அரசு மருத்துவமனையில் மருத்துவரிடம் சான்று பெற்றுள்ளோம். என்ன வகையான ஆய்வு செய்தார்கள் என்றால் மருத்துவர் தான் செய்தார். நான் ஓமலூர் மருத்துவமனைக்கு எதிரியை அழைத்து செல்லவில்லை என்றால் ஆமாம். அப்போது நான் உள்நோயாளியாக இருந்தேன். குருசாமி அவர்களும் உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்தார்.

13. நான் சிகிச்சையிலிருந்ததால் எந்த காவலர் எதிரியை மருத்துவ பரிசோதனைக்கு அழைத்து சென்றார் என்ற விவரம் எனக்கு தெரிய வாய்ப்பில்லை என்றால் ஆமாம். எனக்கு ரத்த காயம் ஏற்பட்டதால் எக்ஸ்ரே பரிசோதனை செய்யப்பட்டதா என்றால் இல்லை. மூக்கில் ஜவ்வு கிழிந்துவிட்டது. மருத்துவர் சான்று வழங்கியுள்ளார்.

14. ஜவ்வு கிழிந்ததை மருத்துவர் எவ்வாறு அறிந்து கொண்டார் என்றால்

என்னை நேரடியாக பரிசோதனை செய்து தெரிந்து கொண்டார். ஜவ்வு கிழிந்ததால் எத்தனை நான் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன் என்றால் ஓர் இரவு சிகிச்சை பெற்றேன். கிழிந்த ஜவ்விற்கு தையல் போடப்பட்டதா என்றால் இல்லை. எதிரிக்கு சிறு வயது முதல் குடிபழக்கம் இல்லை என்றால் சரியல்ல. மருத்துவர் குடிபழக்கம் உள்ளதாக சான்று வழங்கியுள்ளார்.

15. எதிரிக்கும் மேச்சேரியில் எக்ஸ். சேர்மன் ராஜா மகனுக்கும் இரு சக்கர வாகன விபத்து சம்மந்தமாக போன் மூலமாக சொன்னதால் அதன் காரணமாக எதிரி மீது பொய் வழக்கு போட்டோம் என்றால் சரியல்ல. எதிரி மேச்சேரி காவல் நிலையத்திற்கும், உயர் அதிகாரிகளுக்கும் இது சம்மந்தமாக எதிரி மனு அனுப்பியுள்ளார் என்றும் அது சம்மந்தமாக நாங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

16. பஸ் ஸ்டான்டில் எனக்கும் எதிரிக்கும் வாக்குவாதம் எவ்வளவு நேரம் நடந்திருக்கும் என்றால் 20 நிமிடம் வாக்குவாதம், அடித்தது எவ்வளவு நேரம் என்றால் அந்த 20 வது நிமிடத்திற்குள் தான். நான் அங்கு சென்ற போது பொது மக்கள் எவ்வளவு பேர் இருந்தனர் என்றால் 30 நபர்கள் இருந்தனர். பொது மக்கள் யாரிடமாவது சம்பவம் குறித்து விசாரித்தோமா என்றால் விசாரித்தோம். அவ்வாறு யார் யாரை விசாரித்தோம் என்றால் பெயர் தெரியாது. ஆனால் விசாரித்தோம்.

17. யார் விசாரணை செய்தார்கள் என்றால் காவல் ஆய்வாளர் செய்தார். காவல் ஆய்வாளர் சம்பவயிடத்தில் இல்லை என்றால் ஆமாம், ஆனால் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார். என்று விசாரித்தார் என்றால் 3ம் தேதியன்று விசாரணை செய்தார். நாங்கள் நால்வரும் பேருந்து நிறுத்தம் சென்ற போது நாங்கள் யாரையாவது விசாரித்தோமா என்றால் ஆமாம். அவர்களை சாட்சியாக காண்பிக்கப்பட்டுள்ளார்கள்.

18. சம்பவயிடத்தில் இருந்த 30 நபர்களையும் நாங்கள் நால்வரும் விசாரணை செய்தோமா என்றால் இல்லை. உண்மையில் நான் சொன்னவாறு சம்பவம் நடந்திருந்தால் 30 நபர்களையும் விசாரித்திருப்போம் என்றும் சொன்னால்

சரியல்ல. 30 நபரையும் அடுத்த நாள் காவல் நிலையம் அழைத்து சாட்சியாக விசாரிக்க அழைத்து சென்றோம். சாட்சி மீண்டும் விசாரித்து வாக்குமூலம் பதியவில்லை. 30 பேரும் சம்பவத்திற்கு பிறகு பேருந்தில் ஏறி சென்றுவிட்டார்கள். மறுநாள் காவல் ஆய்வாளர் அவர்களை விசாரித்துள்ளார், அவரை கேட்டால் தான் தெரியும்.

19. சம்பவயிடத்திலிருந்த 30 நபர்களுடைய பெயர் மற்றும் விலாசம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான்கு பேருக்கும் தெரியாதா என்றால் தெரியாது. ஓர் அரசியல் வாதி போன் செய்த பின்னிட்டு எதிரியை அழைத்து சென்று எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தோம் என்றால் சரியல்ல. 100 ல் புகார் கொடுத்தது யார் என்று எனக்கு தெரியாது என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நடுவர் எண்.2
மேட்டூர்.

**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>In the Court of Judicial Magistrate No.II, Mettur</u>**

**Case No : C.C. 434/2023**

**Prosecution witness : அ.சா.2** **Date : 17.04.2025.**

| | |
|---|---|
| **Name : பழனிவேல்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் தற்போது சேலம் மாவட்டம் கோவிந்தபாடியில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது டி.என்.பி.சி தேர்விற்கு தயார் செய்து வருகிறேன். கடந்த 2019 ம் வருடம் ஏப்ரல் மாதத்திலிருந்து Friends of Police ஆக மேச்சேரி காவல் நிலையத்தில் இருந்தேன். ஆஜர் எதிரியை தெரியாது. 02.08.2019 ம் தேதி நான் என்னுடைய சொந்த ஊரிலிருந்தேன். நான் காவல் நிலையம் செல்லவில்லை. இரண்டு நாட்கள் கழித்து காவல் நிலையம் சென்றேன்.

2) நான் காவல் நிலையம் சென்ற போது இரண்டு நாட்களுக்கு முன்பு ராணுவத்தை சேர்ந்த ஒரு நபர் மேச்சேரி பேருந்து நிலையத்தில் மது போதையில் பிரச்சனை செய்ததாக கேள்விப்பட்டேன். அவர் யாருடன் பிரச்சனை செய்தார் என்று எனக்கு தெரியவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

3) Friends of Police ன் பணி என்னவென்றால் காவலர்கள் தனியாக ரோந்து செல்லும் போது அவர்களுடன் செல்வேன். நான் கடந்த 02.08.2019 ம் தேதி இரவு 9.45 மணியளவில் நானும் முதல் நிலை காவலர் பாபு அவர்களும் இரவு அலுவலாக மேச்சேரி பேருந்து நிறுத்தம் வந்த போது ஆஜர் எதிரி மது போதையில் தன்னுடைய இரு சக்கர வாகனத்தை சாலையில் நிறுத்தி தகராறு செய்து கொண்டிருந்ததாகவும், அவர் கெட்ட வார்த்தையால் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் பழனிசாமியையும், பாபுவையும், திட்டியதாகவும் பாபுவையும், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் குருசாமியையும் லத்தியால் அடித்து காயப்படுத்தியதாகவும் பிறகு கொலை மிரட்டல் விடுத்ததாகவும் அந்த சமயம் உடனிருந்து அதை பார்த்ததாகவும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

4) எந்த வருடம் B.E படித்தேன் என்றால் 2016–2020 வரை படித்தேன்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி<br>
குற்றவியல் நடுவர் எண்.2<br>
மேட்டூர்.